பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 666 **நாள்: 11.11.2026**

திரு.வி.க.நகர் மண்டலத்தில் சென்னை நடுநிலைப்பள்ளி, அம்மா உணவகம் மற்றும் நியாய விலைக் கடைகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இன்று (11.11.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-70, கபிலர் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியின் செயல்பாடுகள், சமையலறை, பள்ளி வளாகம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர், ராஜா தெருவில் உள்ள அம்மா உணவகத்தினைப் பார்வையிட்டு, சமையலறை, பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் வசதிகள் குறித்து ஆய்வு செய்து, மக்களுக்கு தரமான உணவினை வழங்கிட பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, அப்பகுதியில் உள்ள 2 நியாய விலைக் கடைகளைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.